# இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

இயேசு மறுமொழியாக, “நீங்கள் அரும் அடையாளங்களைக் கண்டதால் அல்ல, மாறாக, அப்பங்களை வயிறார உண்டதால்தான் என்னைத் தேடுகிறீர்கள் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன். அழிந்து போகும் உணவுக்காக உழைக்க வேண்டாம். நிலைவாழ்வு தரும் அழியாத உணவுக்காகவே உழையுங்கள். அவ்வுணவை மானிட மகன் உங்களுக்குக் கொடுப்பார். ஏனெனில் தந்தையாகிய கடவுள் அவருக்கே தம் அதிகாரத்தை அளித்துள்ளார்” என்றார்

(யோவான் 6:26-27)



# நம் உள்ளங்களில் பாலைநிலங்களையும் உருவாக்கிவருகிறோம் -திருத்தந்தை

**வத்திக்கான்:** கோவிட்-19 பெருந்தொற்று உருவாக்கியுள்ள இந்த நெருக்கடியான காலக்கட்டத்தில், நாம் சந்தித்துவரும் மிகப்பெரும் சவால்களில் பட்டினி, உணவு பாதுகாப்பின்மை, ஊட்டச்சத்து குறைபாடு ஆகியவையும் அடங்கும் என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் ஐ.நா. நிறுவனம் ஏற்பாடு செய்துள்ள ஒரு பன்னாட்டுக் கூட்டத்திற்கு அனுப்பியுள்ள செய்தியில் கூறியுள்ளார்.



இத்தாலிய அரசின் அழைப்பை ஏற்று, கடந்த ஜூலை 26 முதல் 28 முடிய, உரோம் நகரில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள உணவு அமைப்புகள் உச்சி மாநாட்டின் தயாரிப்பு கூட்டத்திற்குத் திருத்தந்தை இச்செய்தியை ஐ.நா. நிறுவனத்தின் தலைமைப் பொதுச்செயலர், அந்தோனியோ கூட்டேரஸ் அவர்களுக்கு அனுப்பியுள்ளார்.

நாம் அனைவரும் ஒரே மனித குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்ற அடிப்படை உண்மையைக் குலைக்கும் வண்ணம், நம்மிடையே உருவாகியுள்ள அநீதிகளை, இந்த பெருந்தொற்று மேலும் வெளிப்படையாக புரியவைத்துள்ளது என்று திருத்தந்தை தன் செய்தியில் கூறியுள்ளார்.

இந்த பூமிக்கோளத்தின் உற்பத்தியைப் பெருக்கும் வண்ணம், தொழில்நுட்பங்களை வளர்த்து அவை நம் பூமிக்கோளத்தின் இயற்கை வளங்களை அளவுக்கதிகமாக உறிஞ்ச நாம் வழி அமைப்பதால், நமக்கு அகமும் புறமும் பாலைநிலங்களையும் உருவாக்கிவருகிறோம் என்ற கவலையைத் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இச்செய்தியில் வெளியிட்டுள்ளார்.

மனித குடும்பத்திற்குத் தேவையான உணவை நாம் உற்பத்தி செய்யும் அதே வேளையில், பல கோடி மக்கள் ஒவ்வொரு நாள் உணவுக்கும் போராடவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ள பெரும் அநீதியை, வேரோடு களைவது, நம் அனைவரின் கடமை என்பதை, திருத்தந்தை வலியுறுத்திக் கூறியுள்ளார்.

பெருந்தொற்றை தொடர்ந்துவரும் காலத்தில், நாம் மீண்டும், கிராமப்புறங்களுக்கும், சிறு விவசாயிகளுக்கும் முக்கியத்துவம் கொடுத்து, உலகளாவிய உணவு உற்பத்தியை பெருக்கி, அது அனைவரையும் சென்றடையும் வழிகளையும் உறுதி செய்யவேண்டும் என்று, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், தன் செய்தியில் அழைப்பு விடுத்துள்ளார்.

பாரம்பரிய, பழங்குடியின உணவு முறைகளுக்கு உரிய மதிப்பை வழங்கி, அவற்றை மீண்டும் உயிர்ப்பித்து, மனித குடும்பத்தையும், பூமிக்கோளத்தையும் காப்பது நம் அனைவருக்கும் முன் இருக்கும் மிகப்பெரும் சவால் என்பதையும், திருத்தந்தை இச்செய்தியில் நினைவுறுத்தியுள்ளார்.



# கோலாலம்பூர் மாமறைமாவட்டதில் முதியோர் தினத் திருப்பலி கொண்டாடப்பட்டது

**கோலாலம்பூர்:** கோலாலம்பூர் மாமறைமாவட்டம் முதல் தாத்தா-பாட்டி மற்றும் முதியோர் தினத்தைக் கடந்த ஜூலை 25 அன்று, கொண்டாடியது. திருப்பலிக்குத் தலைமையேற்ற பேராயர் ஜூலியன் லியாவ் அவர்கள் அன்று சிறப்பு மறையுரையாற்றினார்

பேராயர், அவரது மறையுரையில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தேர்வுச் செய்த ‘நான் உங்களுடன் இருக்கிறேன்’ (மத் 28:20) என்ற மையக்கருத்தையொட்டி பகிர்ந்துகொண்டார். அவரது உரையில் இந்த நெருக்கடி காலக் கட்டத்தில் முதியோர்கள் வாழ்வு சோதனைக்குரியதொன்றாக உள்ளது என்றார்.

தொடர்ந்து, அவரது மறையுரையில் அன்னை மரியாவை வானத்தூதர் சந்தித்ததைப் போன்று, தாத்தா-பாட்டிமார்களையும் முதியோர்களையும் குடும்ப உறுப்பினர்கள், உற்றார் உறவினர்கள் நேரில் சந்திக்க வேண்டும். இக்காலக்கட்டத்தில் இது நிறைவேற இயலாதச் சூழலில் இவர்கள் உள்ளனர் என்று வருத்தம் தெரிவித்தார். இவர்கள் திருப்பாடல்களை தியானிப்பதிலும் இறைவார்த்தையை வாசிப்பதிலும் நேரத்தைச் செலவிடுவது சாலச் சிறந்தது என்றார்.



பேராயர் ஜூலியன் லியாவ்

திருஇருதய ஆண்டவர் பங்கின் பங்குத்தந்தையும் குடும்ப நல வாழ்வு பணிக்குழுவின் ஆலோசகருமான அருள்தந்தை எட்வின் பீட்டர் அவர்கள் கூட்டுத் திருப்பலியில் ஜூலை மாத இறுதி வாரமானது, அன்னை மரியாவின் தாயாரான புனித அன்னம்மாள் அர்ப்பணிக்கப்பட்ட வாரமாக இருப்பதை நினைவு கூர்ந்து, கொண்டாட்டத் திருப்பலியில் பங்குபெற்ற அனைவருக்கும் வாழ்த்துக்கூறி நன்றி நவில்ந்தார்.

# புதிய முறையில் மறைபரப்பு பங்கு சமூகம் உருமாற்றப் பயிற்சி

**கோலாலம்பூர்:** தீபகற்ப மலேசிய ஆயர்களின் அங்கீகாரம் பெற்ற ‘புதிய மறைபரப்புக்கான கல்வி நிறுவனம்’ பங்கு தலைவர்கள் உருமாற்ற உருவாக்கப்பயிற்சியைக் கடந்த ஜூலை 23, 2021 அன்று தொடங்கியது. இந்த தொடக்க நிகழ்வு கோலாலம்பூர் மாமறைமாவட்டத்தின் பேராயர் ஜூலியன் லியாவ், பினாங்கு மறைமாவட்ட ஆயர் டத்தோ ஸ்ரீ செபஸ்தியன் பிரான்சிஸ் மற்றும் மலாக்கா-ஜோகூர் ஆயர் பெர்னர்ட் பவுல் ஆகியோரின் ஆசியில் நடைபெற்றது.

இந்த தொடக்க நிகழ்வின் இறுதியில் ஆயர் பெர்னர்ட் பவுல் அவர்கள் அதிகாரப்பூர்வமாக பங்கு தலவர்கள் உருமாற்ற உருவாக்கப் பயிற்சியைத் தொடக்கி வைத்தப்பின், இப்பயிற்சியின் உள்ளடக்கம் மற்றும் சொற்பொழிவாளர்களின் விபரப்பட்டியல் கொண்ட காணொளி இடம்பற்றது. அத்தருணத்தில், உலகெங்கும் மக்ளைப் பல்வேறு வகையில் பாத்துள்ள கோவிட்-19 தொற்றானது, திருஅவையின் பங்கு சமூகங்களை மேலும் உறுதியான அர்ப்பணிப்புவுணர்வோடு இயங்க வைக்க புதிய மற்றும் ஆக்கப்பூர்வமான அணுகுமுறைகளைக் கண்டுபிடித்துச் செயல் படுவதற்கான தேவைகளை உள்ளது என்று ஆயர் பெர்னர்ட் பவுல் கூறினார். தொடர்ந்து, மறைபரப்பின் தூய ஆவியார் திருஅவைக்குள் செயலாற்றுகிறார். எனவே, நாம் அனைவரும் இந்த புனித முறையிலான தொலைத்தொடர்பு வழிமுறையைப் பற்றிக்கொண்டு, இந்த பயிற்சியில் ஒரு தலைப்பாக உள்ள இந்த வழிமுறையை அறிந்துகொண்டு செயலாற்ற வேண்டும் என்று வேண்டுகோள்விடுத்தார்.

மேலும், கடந்த நவம்பர் 26, 2016-ல் நடைபெற்ற நான்காவது தீபகற்ப மலேசிய மாநட்டில் (PMPC), ஆயர்கள் வெளியிட்ட அறிக்கைக்கு இணங்க பங்குகள் புத்துயிர் பெறவம் புதுப்பிக்கப்படவும் பொதுநிலையினர் பொதுநிலையினருக்காக எடுக்கும் முயற்சியாக இந்த இயங்கலை வழி பயிற்சி அமைகிறது என்றார். தொடர்ந்து இந்த பயிற்சியில் சொற்பொழிவாற்றவுள்ள பேச்சாளர்களையும் அறிமுகப் படுத்தினார்.

தொடர்ந்து, இப்பயிற்சியில் இடம்பெற்றுள்ள சொற்பொழிவு தலைப்புகளை வெளியிட்டார். அவை: நெருக்கடி வேளையில் கிறிஸ்துவை இணைத்தல், பங்கு இறைமக்களின் தேவைகள், நான் சேவைக்கான தலைவர், உடல் சார்ந்த இடைவெளியில் நெருக்கம், நமது ஆசீர்வாதங்களைப் பகிர்தல், மையப்படுத்துதலும், பகிர்தலும் மற்றும் சமூக ஊடகங்களின் தொடர்பு ஆகியவையாகும்.



ஆயர் பெர்னர்ட் பவுல் | பேராயர் ஜூலியன் லியாவ் | ஆயர் டத்தோ ஸ்ரீ செபஸ்தியன் பிரான்சிஸ்

இந்நிகழ்வில் அடுத்துப் பேசிய பேராயர் ஜூலியன் லியாவ், இந்த நெருக்கடி காலத்தில், பங்கு சமூகங்களுக்கான மறுமலர்ச்சி இன்றியமையாதது என்றும், ‘திருஅவை தேவை’ உணரப்படுவதாக இருக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தினார். மலேசியா கோவிட்-19 தொற்றுக்கெதிராகப் போராடிவரும் இக்காலக்கட்டத்தில் இந்த புதிய மறைபரப்புக்கான உருமாற்றப் பயிற்சியானது நாம் தொடர்ந்து செயல்பட ஊக்குவிப்புக்கு ஒரு வாய்ப்பு என்றார்.

நிறைவாக உரையாற்றிய மலேசியா, சிங்கப்பூர் மற்றும் புருணை வட்டார திருஅவையின் ஆயர் மன்றத்தின் தலைவருமாகிய ஆயர் செபஸ்தியல் அவர்கள், ஆயர் மன்ற திருஅவையின் தூரநோக்குக்கு ஏற்ப இந்த பயிற்சியின் விளைவு அமையும் என்று தாம் எதிர்பார்ப்பதாகவும் இதன் வழி இந்த நெருக்கடி காலக்கட்டத்தில் ஒரு பரவலான அணுகுமுறையாக இது அமையும் என்றும் அவர் கருத்துரைத்தார்.

இப்பயிற்சியானது இரு வாரங்களுக்கு ஒருமுறை, இயங்கலை வழி ஜூலை 24 தொடங்கி ஆகஸ்டு 28 வரை இக்கல்வி நிறுவனத்தின் தலைவர் மைக்கல் சேவியர் அவர்ளின் தலைமையில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

## சுங்கை பட்டாணி பங்கில் இயங்கலை வழி தியானத்தாள் பகிர்வு

**சுங்கை பட்டாணி:** இங்குள்ள கிறிஸ்து அரசர் பங்கின் தாமான் ரியா மற்றும் ரியா ஜெயா ஆகிய இரு அடிப்படை திருஅவை சமூகங்கள் மேற்கொண்ட மாதாந்திர சிந்தனைதாள் பகிர்வு (BEC Reflection) முதன் முறையாக இயங்கலை வழி, இளைஞர் குழுத் தலைவர் மெர்வின் மார்ட்டின் தலைமையில் நடைபெற்றது. இதில் தமிழ், சீனம், ஆங்கிலம் பேசும் மக்கள் கலந்து சிறப்பித்தனர்.

இறந்து கிடந்த காணொளியும் காட்டப் பட்டது. குடும்பத்தோடு அமர்ந்து பார்த்துக் கொண்டிருந்தவர்கள் அந்த அவல நிலைக்க ண்டு உருக்கமாக தங்கள் கருத்தைப் பகிர்ந்து கொண்டனர். நம் பிள்ளைகளுக்கு இது போன்ற விபத்துக்கள் குறித்த விழிப்புணர்வும் எச்சரிக்கையும் இன்றியமை யாதது எனக் கலந்துகொண்டோரில் ஒருவர் கருத்துரைத்தார்.




ஜூலை 30-ம் திகதி "மனித கடத்தலுக்கு எதிரான உலக நாள்-குரல் கொடுப்போம்" என்ற தலைப்பில் சிந்தனை தாள் பகிரப் பட்டது. இப்பகிர்வில், சொந்த நாடுகளிலும் வெளிநாடுகளிலும் எப்படி அந்நியர்களை, குறிப்பாக பெண்களையும் குழந்தைகளையும் கடத்தி அதிகப் பணத்திற்கு விற்பதும் பாலியல் ரீதியாக அவர்களைத் துன்புறுத் துவதும்; குழந்தைகளைப் பிச்சையெடுக்க வைப்பதும்; அவர்களின் உறுப்புகளை அகில உலக ரீதியில் விற்று கொள்ளை பணம் பெறுவதும் இக்காலத்தில் எளிய செயலாக மாறிவிட்டது என்பது விளக்கப்பட்டது,

இதனையொட்டி, *CO2 ROUTE* என்று அழைக்கப்படும் அகில உலக கடத்தல் கார்கள் எவ்வாறு ஆண்களும் பெண்களும் அடங்கிய 39 பேரை வியட்னாமிலிருந்து இலண்டனுக்கு கனரக சுமையுந்தில் கடத்திச் சென்றார்கள் என்றும், அதில் அவர்கள்

மேலும், இந்த கலந்துரையாடலின் போது, அந்நியர்களுக்குச் சம மதிப்பளிக்க வேண்டிய தன் முக்கியத்துவத்தைப் பிள்ளைகளுக்கு சிறு வயதுமுதல் அறிவுறுத்த வேண்டும் என்று மற்றொரு பங்கேற்பாளர் கூறினார்.

தொடர்ந்து, நீமொ 31:31-ல் காணப்படும் இறைவார்த்தைப் பகுதி வாசிக்கப்பட்டது. அதனையொட்டி, பங்குத்தந்தை விக்டர் லூயிஸ் அவர்கள், ஏழை எளியோருக்காக நாம் எப்போதும் குரல் கொடுக்க வேண்டும் என்று அனைத்துக் குடும்பங்களையும் வலியு றுத்திக் கேட்டுகொண்டார். மேலும், ஏழை எளியோருக்காகக் குரல்கொடுப்பதானது கடவுள் நமக்கு விடுத்துள்ள அழைப்பு என்றும் அறிவுறுத்தினார்.

நிறைவாக, இந்த அ.தி.ச. சந்திப்பில் இயங்கலை வழி கலந்துகொண்ட அனை வருக்கும் பங்குத்தந்தை ஆசீ வழங்கினார்.

*S. செபஸ்தியன், (அதிச தலைவர்)*

## திருத்தந்தையின் திருத்தூதுப் பயண தயாரிப்பு 40 நாள் இறைவேண்டல்

**வத்திக்கான்:** இந்த ஆண்டு, செப்டம்பர் மாதம் 12ம் திகதி முதல் 15ம் திகதி முடிய, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், சுலோவாக்கியாவிற்கு மேற்கொள்ளவிருக் கும் திருத்தூதுப் பயணத்திற்கு மக்களைத் தயாரிக்கும் விதமாக, ஆகஸ்ட் 7ம் திகதி முதல் செப்டம்பர் 15ம் திகதி முடிய, 40 நாள்கள் இறைவேண்டல் நாள்களாக அறிவித்துள்ளது, அந்நாட்டில் செயலாற்றும் திருப்பீட மறைப்போதகப் பணி அமைப்பு.



இந்த 40 நாள்களும் ஒவ்வொரு விசுவாசி யும் ஆலயத்திலோ, தங்கள் இல்லத்திலோ, சமுதாயக் குழுக்களிலோ, செபமாலை செபித்து, இந்த திருத்தூதுப் பயணத்திற்கு தயாரிக்கும் அதே வேளையில், இந்த ஆன்மீக விருந்து தயாரிப்பில், அனைத்து நல்மனம் உடையவர்களும் கலந்து கொள்ள வேண்டும் எனத் தலத்திருஅவை விண்ணப்பித்துள்ளது.

நம் வாழ்வுப் பயணத்தில் இயேசுவின் இடத்தையும், அவரைப் பின்பற்றுவதில் அன்னை மரியா மற்றும், புனித யோசேப் பின் வழிகாட்டுதலையும் மனதில்கொண்டு, திருத்தந்தையின் திருத்தூதுப் பயணத்துக் காக நம்மையே தயாரிப்போம் என, சுலோவாக்கியா ஆயர்கள் கத்தோலிக்க நம்பிக்கையாளர்களிடம் விண்ணப்பித்துள் ளனர்.

*கிறிஸ்டோபர் - வத்திக்கான் செய்திகள்*

## தீபகற்ப மலேசிய அருள்பணியாளர்கள் மாலை திருப்புகழ்மாலையில் இணைந்தனர்

**கோலாலம்பூர்:** உலக தாத்தா- பாட்டி மற்றும் முதியோர் தினத்தையொட்டி, புனித யோசேப்பு பங்கு இயங்கலை வழியாக திருப்புகழ் மாலை இறைவேண்டல் நிகழ்வை தீபகற்ப மலேசியா அருள்பணியாளர் களுக்காக நடத்தியது. வெவ்வேறு மறை மாவட்டங்கிலிருந்து 40 அருள்பணியாளர்கள் பங்கேற்ற இந்நிகழ்வில் பேராயர் ஜூலியன் லியாவ் அவர்களும் கலந்து இறுதியல் ஆசீர் வழங்கினார்.

ஈப்போவின், இடைவிடா சகாய அன்னை பங்கின் அருள்தந்தை பெட்ரிக் மாசாங் அவர்கள், கடவுளின் மீட்புத் திட்டத்தில் பெரும் பங்காற்றிய தாத்தா-பாட்டி மற்றும் முதியோரை மையமாகக் கொண்ட சிறு தியானத்தைப் பகிர்ந்தார். இவரது தியான பகிர்வானது, 'பல ஆண்டு வாழ்வின் நிறைவு' என்ற மையக்கருத்தையொட்டி அமைந்தது அதன் சிறப்பு எனலாம். அவர் மேலும், நமது தாத்தா-பாட்டிமார்களும் முதியோர்களும் யாருக்கும் சொந்தமானவர்கள் இல்லை போன்ற உணர்வோடும் மனவேதனை யோடும் வாழ்கிறார்கள் என்றுரைத்தார். அத்தோடு, அவர்களது அனுபவச் செல்வங் களை நாம் மதிப்பதோடு, அடுத்துவரும் இளைய சமூகத்திற்கு அவர்களைப் பற்றிய உன்னத கதைகளைக் கூறவேண்டும் என்று கருத்துரைத்தார்.

புனித யோசேப்பு பங்கு இந்த மாலை திருப்புகழ்மாலை இறைவேண்டல் ஏற்பாட் டிற்காக வெகுவாகப் பாராட்டப்பட்டது.

முதியோரை மதித்துப் பராமரிக்கும் சமூதாயம் இறைவனின் ஆசீரை நிறைவாகப் பெறும். அவர்கள் ஒருபோதும் சுமையாகக் கருதப்படக்கூடாது. தனிமை யும் புறக்கணிப்பும் அவர்களைப் பெருமள வில் பாதிக்கும்.

## வாழ்வு தரும் உணவால் வாழ்வோம்

"நானே வாழ்வு தரும் உணவு" என்றுரைத்த ஆண்டவர் இயேசு, ஆன்ம உணவையும் சேர்த்து அளிக்க இன்றைய பொதுக்காலம் 18ம் ஞாயிறு திருப்பலிக் கொண்டாட்டத்திற்கு அழைக்கிறார். இன்றைய முதல் வாசகத்தில் இஸ்ரயேல் மக்கள் தங்களுக்கு உணவு கிடைக்க வில்லை என்று சொல்லி, "நாங்கள் எகிப்து நாட்டில் இறைச்சிப் பாத்திரத்தின் அருகே அமர்ந்து வயிறார உண்டோமே, இங்கு நாங்கள் பட்டினி கிடந்தது சாகவா எங்களை அழைத்துக் கொண்டு வந்தீர் கள்?" என்று மோசேக்கும் ஆரோனுக்கும் எதிராக முணுமுணுகிறார்கள். அது மட்டுமல்லாமல் அவர்களுக்கு எதிராகக் கலகம் செய்கிறார்கள். உடனே மோசே கடவுளிடம் வேண்டினார். கடவுள் அவர்களுக்கு மன்னாவையும் காடையை யும் உணவாகத் தந்தார்.

கடவுள் நினைத்தால், மக்களுக்கு எப்படி யும் உணவு தரமுடியும். ஆனால், மக்களோ உடல் பசியை போக்கும் உணவுக்காக மோசேக்கு எதிராகவும் கடவுளுக்கு எதிராகவும் கலகம் செய்தார் கள் என்பதுதான் வேடிக்கையாக இருக்கின்றது. கடவுள் மீது கொண்டிருக்க வேண்டிய உண்மை, நம்பிக்கை நீதி போன்றவற்றுக்கு முறனாக நடந்து கொண்டனர்.

இதையொட்டி பவுலடியார் இரண்டாம் வாசகத்தில், நம்முடைய முந்தின நடத்தையை மாற்றி, தீய நாட்டங்களால் ஏமாந்து அழிவும் பழைய மனிதருக்குரிய இயல்பைக் களைந்துவிட்டு உண்மை யிலும், நீதியிலும், தூய்மையிலும் வாழ அழைக்கிறார். மனித வாழ்க்கை என்பது வெறுமனே உணவுக்காக அடித்துக் கொண்டு சாவதும், பொருள் தேடி அலைவதும் கிடையாது என்கிறார்.

நற்செய்தியில், இயேசுவால் தங்களுக்கு வயிறார உண்ண உணவு கிடைக்கும் என்ற நினைப்பில்தான் மக்கள் அவரைத் தேடி வந்திருக்கின்றார்கள் என்பதை இயேசு அறிந்திருந்தார். எனவேதான், நீங்கள் அரும் அடையாளங்களைக் கண்டதால் அல்ல, அப்பங்களை வயிறார உண்டதால்தான் என்னைத் தேடுகின் றீர்கள் என்கிறார். இன்று நம்மில் பலர், பல வேளைகளில் கடவுளிடமிருந்து பெற்றுக் கொண்ட நன்மைகளுக்காகவே அவரை நாடி வருகிறோம். ஆனால், கடவுளிட மிருந்து நன்மைகளைப் பெற்றுக்கொண்ட நாம் பிறருக்கு நன்மை செய்கிறோமா? என்பது கேள்வியாகிறது. நாம் ஒவ்வொரு வரும் உலகப் போக்கிலான வாழ்க்கை வாழ்வதை விடுத்து, நிலைவாழ்வைத் தரக்கூடிய ஆண்டவர் ஒருவரைத் தேடி வாழ்கின்ற வாழ்க்கையினை வாழ வேண்டும் என்று ஆண்டவர் வேண்டு கிறார்கள்.

பணம், பொருள், செல்வம் இவற்றால்தான் நமக்கு நிம்மதி கிடைக்கும் என்று தப்புக் கணக்குப் போட்டு, அதற்காக இராப் பகலாய் பாடுபட்டு உழைத்துக் கொண் டிருக்கின்றோம் ஆனால், அவற்றால் நமக்கு நிம்மதி கிடைப்பதில்லை. இயேசு தரும் உணவு உயிர் வாழ்வதற்கு உதவியாக உள்ளது. இந்த உயிர் அழியாதன்மை கொண்டது. அதற்குத் தேவை நிலைவாழ்வு. இந்த உணவு இயேசுவால் மட்டுமே நமக்கும் தரப்படக் கூடியது. அதை நற்கருணை வாயிலாக நமக்கு அவர் அயராது வழங்கிக் கொண்டிருக்கிறார். அதுவே நமது கிறிஸ்தவ வாழ்வுக்கு உச்சமும் ஊற்றுமாக உள்ளது என்று இரண்டாம் வத்திக்கான் சங்கமும் வலியுறுத்தி வருகிறது. அடுத்து, நமது அன்றாட உணவாக இறை வார்த்தையையும் கடவுள் அளித்துள்ளார். இந்த இரு உணவும் நமக்கு ஆன்மீக ஆற்றலையும், தூய்மையையும் அளிக்க வல்லன. ஒவ்வொரு திருப்பலியிலும், ஆண்டவர் தன்னையே பிட்டு நமக்கு வழங்குகிறார். நம்மையே பிறருக்குப் பகிர்ந்தளிக்க அவர் அழைக்கிறார். 'உங்கள் மனப்பாங்கு புதுப்பிக்கப்படவேண்டும்' என்று பவுல் அடிகள் கூறுவதை நினைவில் கொண்டு, உலக வாழ்வுக்கு அல்லும் பகலும் உழைக்கும் நாம் நிலைவாழ்வைப் பரிசாகப் பெற ஆண்டவர் அருளும் உணவை ஏற்போம். ஏனெனில் நாம் உண்ணும் உணவு வகையல்ல, பிறருக்கு உணவிட்டு வாழ்தலே சிறப்பு.

"உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே" என்பது ஆன்றோர் வாக்கு.

*ம. செல்வராஜூ, மலாக்கா*

**பொதுக்காலம் 18ம் ஞாயிறு**

முதல் வாசகம்: விப. 16: 2-4, 12-15

தி.பாடல்:78: 3,4bc. 23-24. 25,54

2ம் வாசகம்: எபே 4: 17, 20-24

நற்செய்தி: யாவா 6: 24-35

**ஞாயிறு வாசகம் ஆண்டு 2**

**வாரநாள் முதல் வாசகம் –ஆண்டு 1**

**திருப்புகழ் மாலை -வாரம் 2**